**தலைப்பு – 213 கல்வி வெளியீட்டுத் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 213 – கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு, வணிக முற்பணக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2016 யூலை 14 07 ஆந் திகதி திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு, வணிக முற்பணக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**2 கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த நிதி ஏற்பாடும் செலவும்**

---

திணைக்களத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 111.30 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 96.65 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க, திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 14.65 மில்லியன் அதாவது 13.16 சதவீத நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 55.40 | 47.26 | 8.14 | 14.69 |
| மூலதனம் | 55.90 | 49.39 | 6.51 | 11.65 |
| மொத்தம் | 111.30 | 96.65 | 14.65 | 13.16 |

## 2.2 முற்பணக் கணக்குகள்

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 21301 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| அதிகூடிய எல்லை | உள்ளபடி யானவை | ஆகக்குறைந்த எல்லை | உள்ளபடியான வை | அதிகூடிய எல்லை | உள்ளபடி யானவை |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 6.93 | 6.84 | 5.43 | 6.34 | 33.00 | 17.92 |

### 2.2.2 வணிக முற்பணக் கணக்கு

திணைக்களத்தினால் வணிக முற்பணக் கணக்கொன்று பேணப்பட்டிருந்தது.

**(அ) பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

திணைக்களத்தினால் 21302 ஆம் விடய இலக்கத்தின் கீழ் களஞ்சிய முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | | பொறுப்புக்கள் | |
|---|---|---|---|---|---|---|---|
| **அதிகூடிய எல்லை** | **உள்ளபடியானவை** | **அதிகுறைந்த எல்லை** | **உள்ளபடியானவை** | **அதிகூடிய எல்லை** | **உள்ளபடியானவை** | **அதிகூடிய எல்லை** | **உள்ளபடியானவை** |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 3,950.00 | 3,931.82 | 3,000.00 | 4,038.81 | 4,000.00 | 803.51 | 2,500.00 | 2,499.90 |

**(ஆ) நிதி விளைவுகள்**

வணிக முற்பணக் கணக்கின் நிதி விளைவுகள் பின்வருமாறு காணப்பட்டது.

| **விடய இலக்கம்** | **முற்பணக்கு நடவடிக்கை** | **நிதி விளைவுகள்** | | | |
|---|---|---|---|---|---|
| | | **2015** | | **2014** | |
| | | இலாபம் கருதுகோள் கட்டணம் தவிர்ந்த | இலாபம் கருதுகோள் கட்டணத்துடன் | இலாபம் கருதுகோள் கட்டணம் தவிர்ந்த | (நட்டம்) கருதுகோள் கட்டணத்துடன் |
| | | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 21302 | புத்தக அச்சிடல், பிரச்சாரம் மற்றும் விற்பனை | 2,034.1 | 1,171.4 | 262.6 | (665.7) |

## 2.3 பொது வைப்புக் கணக்கு

திணைக்களத்தின் கீழுள்ள 03 பொது வைப்புக் கணக்குகளுக்குரிய 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 3.97 மில்லியனாக இருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| **கட்டுநிதிக் கணக்கு இல** | **2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி** |
|---|---|
| | **ரூபா. மில்லியன்** |
| 6000/0000/00/0001/0088/000 | 3.10 |
| 6000/0000/00/0013/0078/000 | 0.34 |
| 6000/0000/00/0016/0066/000 | 0.53 |
| மொத்தம் | 3.97 |

## 2.4 கணக்காய்வு அவதானிப்பு

கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு, வணிக முற்பணக்கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளுக்கு உட்படத் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளில் உள்ளடக்கப்பட்ட பொருண்மையான மற்றும் முக்கியமான அவதானிப்புகள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையான மற்றும் முக்கியமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 3.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று

21301 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக் கூற்றின் படி அத் திகதியில் உள்ளவாறு அறவிட முடியாமல் இருந்த மற்றும் பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாத மீதி ரூபா 538,290 ஆக இருந்ததுடன், அவை 01 வருடம் முதல் 05 வருடங்களாக தொடர்ந்தனவாகும்.

### 3.2 வணிக முற்பணக் கணக்கு

மீளாய்வாண்டின் போது திணைக்களத்தினால் 21302 ஆம் விடய இலக்க புத்தகங்கள் அச்சிடல், பிரசாரம் மற்றும் விற்பனை தொடர்பான வணிக முற்பணக் கணக்கு செயற்பாடொன்று நிறைவேற்றப்பட்டிருந்தது. கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த அந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

(அ) 2015 ஆம் ஆண்டிற்கான முற்பணக் தொடர்பாக கணக்காய்வு அபிப்பிரயம் வெளியிடப்படமுடியாததுடன், முன்னைய ஆண்டுகளது கணக்குகள் தொடர்பாகவும் கணக்காய்வு அபிப்பிராயம் வெளியிடப்பட முடியாது போனது.

(ஆ) முற்பணக் கணக்கில் அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 632,557 ஆக இருந்ததுடன், அந்நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரை திணைக்களம் தவறியிருந்தது. அதில் ரூபா 28,996 தொகையான மீதியை பதிவழிப்பதற்காக 2016 யூலை 15 ஆந் திகதி கல்வி வெளியீட்டு ஆணையாளரின் அங்கீகாரம் கிடைத்திருந்தது.

(இ) திணைக்களத்தின் செலவின பேரேடுகளின் பிரகாரம் ரூபா 3,909,742,737 கூட்டுத்தொகையான மொத்தச் செலவினம் ஒவ்வொரு மாதத்தின் போதும் மாகாண செலவினமாக இனங்காணப்பட்டும் பகிர்வு செய்யப்படாது, மாதாந்தம் மொத்தச் செலவினமும் ஒரு மாகாணத்தின் விற்பனைக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) 2010 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் அரச பாடசாலைகளுக்கு இலவச பாடப் புத்தகங்களை விநியோகிப்பதற்காக திறைசேரி நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்த போதிலும், அப்புத்தகங்களின் பெறுமதியான ரூபா 9,662,075,550 கடன்பட்டோர் மீதியொன்றாக கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) நிதிப் பிரமாணம் 504 இன் பிரகாரம் ஒவ்வொரு காலாண்டின் இறுதியிலும் வியாபார கடன்பட்டோர், கடன்கொடுத்தோர், முடிவுப் பொருட்கள், பொருட்கள் மற்றும் வழங்கல்

கூற்றுக்கள், முற்பணக் கணக்கு எல்லைகள் தொடர்பான கூற்றும் இலாப நட்டக் கணக்கினையும் தயாரித்து கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதியுடன் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு சமர்ப்பிக்க வேண்டுமாயினும், 2016 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஊ) திணைக்களத்தின் நிதி போக்குவரத்துச் செய்யப்படும் போது நிதிப் பிரமாணம் 326 இன் பிரகாரம் சிறாப்பரோ அல்லது பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரொருவரோ பொலிஸ் பாதுகாப்புடன் செல்ல வேண்டிய போதிலும், வணிக முற்பணச் செயற்பாட்டின் விற்பனை வருமானம் ரூபா 200,000 இனை விஞ்சிய தினங்களிலும் விற்பனை வருமானம் ரூபா 600,000 ஐ விஞ்சியிருந்த விசேட தினங்களிலும் காசுப் போக்குவரத்தின் போது அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திணைக்களத்தின் வணிக முற்பணக்கணக்குடன் தொடர்புடையதாக 2006 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டு வரை திரட்டிய இலாபம் ரூபா 6,732,120,091 ஆக இருந்தது. மீளாய்வாண்டின் இலாபம் ரூபா 2,034,156,417 ஆக இருந்தது. நிதிப் பிரமாணம் 510(2)(ஆ) பிரகாரம் இலாபம் அரசின் வருமானத்திற்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.3 முகாமைத்துவ நலிவுகள்

------------------------------------------

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2008 ஆம் ஆண்டில் அச்சிடப்பட்ட ரூபா 1,127,775 பெறுமதியான 6,835 பற்றுச்சீட்டுப் புத்தகங்கள் 2015 ஆம் ஆண்டிலும் பயன்படுத்தப்பட்டு வருவதுடன் அதில் 30 சதவீதம் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் எஞ்சியிருந்தன. தேவையற்றவாறு புத்தகங்களை அச்சிடுதல் காரணமாக பெருமளவு களஞ்சிய வசதி தேவைப்படுதல் புத்தகங்களுக்கு சேதம் ஏற்படுதல், புத்தகங்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்துவதற்கு இடமளிக்கப்படுதல் போன்ற விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே காணமல் போன பயன்படுத்தப்பட்ட மற்றும் பயன்படுத்தப்படாத ரூபா 1,127,775 பெறுமதியான பற்றுச்சீட்டுப் புத்தகங்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 343 இன் பிரகாரம் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2016 ஆம் ஆண்டின் 409 பாடப் புத்தகங்களுக்கு 44,073,100 பிரதிகளை அச்சிடுவதற்காக அரச மற்றும் தனியார் துறைக்கு ரூபா 3,651,746,650 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. 2015 மே 28 ஆந் திகதிய அமப/15/0597/622/002-1 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் பிரகாரம் பாடப்புத்தகங்களை அச்சிடும் போது 30 சதவீதம் அரசதுறைக்கு வழங்கப்பட வேண்டும். 2016 ஆம் ஆண்டிற்காக அச்சிடப்பட்ட பாடப்புத்தகங்களில் 20 சதவீதம் மாத்திரமே அரசதுறைக்கு வழங்கப்பட்டிருந்தது. கல்வி வெளியீட்டு ஆணையாளரால் உரிய காலப்பகுதியில் பாடப்புத்தகங்கள் அச்சிடப்பட வேண்டியிருப்பதால் முன்னைய ஆண்டுகளின் செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு பாடப்புத்தகங்களை அச்சிடுவதற்கு கையளிக்கப்பட்டதாக கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் தனியார் துறையினரும் உரிய காலப்பகுதியில் அச்சீட்டு வேலைகளை மேற்கொள்ளாதிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(இ) புத்தகங்களின் தரம் தொடர்பான அறிக்கைகளைப் பெற்றுக் கொள்வதற்கு ஆய்வுகூடமொன்று காணப்பட்ட போதிலும் அதில் பயிற்சி பரிசோதனை உத்தியோகத்தர் ஒருவர் இல்லாமை காரணமாக சரியான அறிக்கைகளைப் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. கணக்காய்வினால் கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்திடமிருந்து 06 வகையான புத்தகங்களுக்காக தரப் பரிசோதனை அறிக்கையொன்று பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் 5 உருப்படிகளில் நீட்டக்கூடிய

சுட்டு (Tensile Index) இல்லாமல் இருந்ததுடன் ஒரு உருப்படியில் கடதாசியின் பிரகாசத்தன்மை (Brightness) காணப்படவில்லை.

(ஈ) திணைக்களத்தின் செயற்பாட்டுக் குழுவினால் 7,407,500 பாடப்புத்தக பிரதிகளுக்காக ரூபா 407,600,350 ஆன தண்டப்பணம் விடுவிக்கப்பட்டிருந்தது. இப்பெறுமதியில் 12 சதவீதம் அரசதுறைக்கும் 88 சதவீதம் தனியார் துறைக்கும் விடுவிக்கப்பட்டிருந்ததுடன் தண்டப் பணத்தை விடுவிப்பதற்கு உரித்தான ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) அறிவினை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரத்திற்காக மனிதவள மூலதன செயற்திட்டத்திற்காக (TSEP) ரூபா 20 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அதன் மூலம் 5 செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. அதில் 02 செயற்பாடுகள் மாத்திரம் நிறைவேற்றப்பட்டிருந்ததுடன் செயற்திட்டத்திற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 5.6 மில்லியன் நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

## 3.4 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையும் உள்ளபடியான பதவியணியினரும்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகையான எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 45 | 40 | 05 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 04 | 03 | 01 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 120 | 74 | 46 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 73 | 175 | - | 102 |
| | மொத்தம் | 242 | 292 | 52 | 102 |

மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் 52 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன், அவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) புத்தகங்களை அச்சிடும் போது போதியளவு உத்தியோகத்தர்கள் இல்லாமையால் ஏற்பட்ட தாமதம் காரணமாக அச்சக உரிமையாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தண்டப்பணத்தை விடுவிப்பதற்கு நேர்ந்திருந்தது.

(ஆ) செயற்திட்டத்திலிருந்து செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அவற்றை நிறைவேற்றுவதற்கு போதியளவு பதவியணியினர் காணப்படவில்லை.